செய்தி வெளியீடு எண்: 18 நாள்: 11.04.2018.

***தேனி மாவட்டம்***

***ஓய்வூதியதாரர்களுக்கான குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற உள்ளது மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்:-***

*******

தேனி மாவட்டத்தில் தமிழக அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற அலுவலர்களின் நிலுவையிலுள்ள ஓய்வூதியப் பலன்கள் மற்றும் அதன் தொடர்பான கோரிக்கை மனுக்களை பரிசீலனை செய்யும் பொருட்டு, ஓய்வு பெற்ற அரசு அலுவலர்கள், தொடர்புடைய துறை அலுவலர்கள் மற்றும் அனைத்து ஓய்வு பெற்ற அரசு அலுவலர் சங்கங்கள் அனைவரும் கலந்து கொள்ளும் ஒருங்கிணைந்த கூட்டம், 04.05.2018 அன்று காலை 10.30 மணியளவில் சென்னை ஓய்வூதிய இயக்குநர் அவர்களின் முன்னிலையில் ''ஓய்வூதிய குறைதீர்க்கும் நாள் கூட்டம்'' தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது. எனவே, ஓய்வூதியம் தொடர்பான குறைகள் ஏதும் இருப்பின் அதன் தொடர்பான மனுவினை **30.04.2018-க்குள் ''மாவட்ட ஆட்சித்தலைவர்'', மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், தேனி.** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும், இக்கூட்டத்தில் அனைத்து ஓய்வூதிய சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**